## டி.டி.வி. தினகரனின் 61-வது பிறந்தநாள்:
# திருமங்கலத்தில் மீனாட்சி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு



**திருமங்கலம், டிச. 14-**
அ.ம.மு.க பொதுச் செயலாளர் டிடிவி தினகரனின் 61வது பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் தெற்கு நகர் கழகச் செயலாளர் எம். பிரபு ஏற்பாட்டின் பேரில் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் அ.ம.மு.க மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் கா.டேவிட் அண்ணாத்துரை ரூபவ் ஓ.பி.எஸ் அணி உசிலம்பட்டி எம்.எல்.ஏ.ரூபவ்பி. அய்யப்பன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வழிபாடு நடத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

அ.ம.மு.க பொதுச் செயலாளர் டிடிவி தினகரனின் 61வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுவதிலும் அ.ம.மு.க.வினரால் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் ஒருபகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் மீனாட்சி அம்மன் கோவிலில் அ.ம.மு.க பொதுச் செயலாளர் டிடிவி தினகரனின் பிறந்தநாளை முன்னிட்டு திருமங்கலம் தெற்கு நகர் கழகச் செயலாளர் எம்.பிரபு ஏற்பாட்டின் பேரில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இந்நிகழ்வினில் அ. ம. மு.க மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் கா.டேவிட் அண்ணாதுரைரூபவ்ஓ.பி.எஸ் அணி உசிலம்பட்டி எம்.எல்.ஏ.ரூபவ்பி. அய்யப்பன் ம ற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு டிடிவி தினகரன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்திட வேண்டி சிறப்பு வழிபாடு நடத்தினர்.

இதனை தொடர்ந்து கோவிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் டிடிவி தினகரன் பிறந்த நாளை முன்னிட்டு கட்சி நிர்வாகிகள் இனிப்புகளை வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வினில் அ. ம. மு.க மாநில எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் ராமலிங்கஜோதிரூபவ்மாநில விவசாய பிரிவு தலைவர் அருவுகராஜாரூபவ்மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் சங்கர் மாதவன்ரூபவ்மாநில மாணவியர் அணி செயலாளர் ஜீவிதா நாச்சியார் மற்றும் ஒன்றியரூபவ்திருமங்கலம் தெற்கு நகர் கழக வார்டுரூபவ்கிளை கழக நிர்வாகிகள்ரூபவ்தொண்டர்கள் மற்றும் ஓ.பி.எஸ் அணி திருமங்கலம் நகர் கழகச் செயலாளர் ராஜாமணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## டி.டி.வி.தினகரன் பிறந்த நாள் விழா:
# முதுகுளத்தூரில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



**முதுகுளத்தூர், டிச. 14-**
முதுகுளத்தூரில் அ. ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சுப்பிரமணியர் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகமும் பொது மக்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.

அம்மா மக்கள் முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட அ.ம.மு.க. செயலாளர் எம்.முருகன் தலைமையில் முதுகுளத்தூர் காந்தி சிலை அருகே உள்ள சுப்பிரமணியர் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அமமுக முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம்- வடக்கு ஒன்றிய செயலாளர் சேதுபதி-பொதுக்குழு உறுப்பினர் மலைகண்ணன்-ந

கர செயலாளர் சுந்தரமூர்த்தி –மாவட்ட சிறுபாண்மை பிரிவு செயலாளர் லத்தீப்- வழக்கறிஞர் கண்ணன்-ஜோதிருகன்-மோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## கமுதியில் புதிதாக தொடங்கப்படும்
# ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி மையத்தில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

**கமுதி, டிச. 14-**
இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் புதிதாக தொடங்கப்படும் ஐ.டி.ஐ தொழிற்பயிற்சி மையத்தில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

கமுதியில் புதிதாக தொடங்கப்படும் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி மையத்தில் 2024 -கல்வியாண்டில் சேர WWW.Skiltraining.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என பயிற்சி மையத்தின் முதல்வர் தெரிவித்துள்ளார். டிசம்பர் மாதம் 9 ம் தேதி முதல் 31 ம் தேதி வரை நேரடி சேர்க்கை நடைபெறுகிறது. இதில் 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மெக்கானிக் மின்சார வாகனம், டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரீசியன் மின்னியோகம், ஆகிய இரண்டு ஆண்டு தொழில் படிப்பில் சேரலாம், 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வயர்மேன் இரண்டு ஆண்டு படிப்பில் சேரலாம் ,புதியதாக சேரும் மாணவர்கள் அனைவருக்கும் மாத கல்வி உதவித் தொகை 750/- ரூபாய் வழங்கப்படும் . மேலும் முழு விபரம் தெரிந்துகொள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வரை நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என கூறலாம் என முதல்வர் கூறியுள்ளார் தொடர்பு எண் : 9486888176 என்ற நம்பரை அனைவரும் பயன்படுத்தி கொள்ளுங்கள்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## சக்திகல்லூரியில் சுகாதார பாதுகாப்பு தினம்

**ஒட்டன்சத்திரம், டிச. 14-**
திண்டுக்கல் மாவட்டம்ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளம் செஞ்சிலுவை சங்கம் சார்பில் உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினம் கல்லூரி தாளாளர் வேம்பணன் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தேன்மொழி முன்னிலை வகித்தார்.விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பயிற்சியாளர்கள் திருபாஸ்ரீ , மகேஷ்வரி ஆகியோர் மன அழுத்தத்தை போக்கும் வழிமுறைகள் பற்றி சிறப்புரையாற்றி, மாணவிகளுக்கு யோகா மற்றும் தியானம் பயிற்சிகள் அளித்தனர். இந்நிகழ்ச்சியை கணிதத்துறை உதவிப் பேராசிரியை சத்யஜோதிஒருங்கிணைப்பு செய்திருந்தார்.



திருக்கார்த்திகையை முன்னிட்டு மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் மகாதீபம் ஏற்றப்பட்டது.

## திருமலைக்கேணியில் கார்த்திகை விழா



**நத்தம், டிச. 14-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணியில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாத கார்த்திகை பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு 16 வகையான சிறப்பு அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.சர்வ அலங்காரத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து கோவிலை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீராடி முருகப் பெருமானை தரிசனம் செய்தனர்.மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடுசெய்தனர். இதைப்போலவே நத்தம்-கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதி, குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதிகளிலும் கார்த்திகையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## 50 சதவீத ஆண்களுக்கு 60 வயதிற்குள் புராஸ்டேட் சிறுநீர் பிரச்சினை - டாக்டர் கார்த்திக் தகவல்

**சென்னை, டிச 14-**
இந்தியாவில் புராஸ்டேட் சுரப்பியால் ஏற்படும் உடல்நல பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. 50% ஆண்கள் 60 வயதிற்குள் புராஸ்டேட் சுரப்பியில் வீக்கம் ஏற்பட்டு பெரிதாகுதல் அல்லது தீங்கற்ற புராஸ்டேடிக் ஹைப்பர் பிளாசியா ஆகிய பிரச்சினைகளால் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வயதாவதன் காரணமாக ஏற்படுகிறது. இவர்களுக்கு அடிக்கடி சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிப்பதில் சிரமம் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சில அசவுகரியங்கள் ஏற்படும். வழக்கமாக அறுவை சிகிச்சை மட்டுமே இதற்கான சிகிச்சையாக இருந்தபோதிலும், புராஸ்டேட் ஆர்ட்டரி எம்போலைசேஷன் என்பது போன்ற மிக எளிய சிகிச்சைகள் இப்போது புராஸ்டேட் பராமரிப்பை சீரமைத்து, பெரிய அறுவை சிகிச்சை மற்றும் குணமடைவதற்கு நீண்ட கால தேவை இல்லாமல், பாதுகாப்பான மற்றும் மிகவும் பயனுள்ள மாற்று தீர்வுகளை வழங்குகின்றன.

இதுபற்றி மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனையின் வாஸ்குலர் & இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி துறையின் இயக்குனர் டாக்டர் கார்த்திக் தாமோதரன் கூறுகையில்,’ பிபிஎச் உள்ள ஆண்களுக்கு புராஸ்டேட் ஆர்ட்டரி எம்போலைசேஷன் ஒரு திருப்புமுனையான சிகிச்சையாகும். ரத்தக் குழாயில் செருகப்பட்ட ஒரு சிறிய குழாய் மூலம் செய்யப்படும் இந்த மிகக்குறைந்த ஊடுருவும் சிகிச்சையானது. புராஸ்டேட்டுக்கான ரத்த விநியோகத்தை குறைக்கிறது. இதனால் அது சுருங்குகிறது.

இந்த சிகிச்சை மிகவும் பாதுகாப்பானது, துல்லியமானது. பிஏஇ போன்ற எளிதான சிகிச்சைகள், வழக்கமான உடற்பயிற்சி மற்றும் சீரான உணவு போன்ற வாழ்க்கை முறை மாற்றங்களுடன் இணைந்து, புரோஸ்டேட் பராமரிப்பை மறுவரையறை செய்கின்றன. ஆண்கள் இந்த நவீன சிகிச்சைகளை எடுத்துக்கொண்டால், நோயால் அதிகம் பாதிக்கப்பட வேண்டியதில்லை. மேலும் குணமாக நீண்ட நாட்கள் ஆகும் என்ற பயமும் இல்லாமல் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க முடியும் என்று கூறினார்.

## HDFC ERGO நடத்திய புதுச்சேரி முழுவதும் தனி மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் உட்பட 29 ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் இந்த திட்டத்தில் இணைந்து உள்ளன

**பாண்டிச்சேரி, டிச 14-**
இந்தியாவின் முன்னணி தனியார் துறை காப்பீட்டு நிறுவனமான எச்டிஎப்சி எர்கோ பொது ஆயுள் காப்பீட்டு நிறுவனம், காப்பீட்டு வாரம் ஒன்றே ஏற்பாடு செய்துள்ளது. இதில் ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடுகள் குறித்து விழிப்புணர்வை வாடிக்கையாளர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு டிசம்பர் 2ஆம் தேதி முதல் ஆறாம் தேதி வரை இரண்டாவது பதிப்பாக நடத்தியது. இந்த ஐந்து நாள் விழிப்புணர்வு முகாமில்,ஐஆர்டிஏஐஇன் மாநில காப்பீட்டு திட்ட முன்முயற்சியின் செயல்பாட்டுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் வாகனம், சுகாதாரம், வீடு மற்றும் சிறு மற்றும் குரு தொழில் துறைக்கான ஆயுள் காப்பீடுகளை உருவாக்குவதில் செலுத்த வேண்டிய முக்கிய திட்டங்கள் குறித்து பார்வையாளர்களுக்கும், பங்கேற்ற வாடிக்கையாளர்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டன.

இது குறித்து எச்டிஎப்சி எர்கோ பொது ஆயுள் காப்பீட்டு பிரிவின் மேலான் இயக்குனரும், நிர்வாக அதிகாரியுமான அனுஜ் தியாகி கூறுவையில், வாடிக்கையாளர்களுக்கு எவ்வித தொந்தரவும் இல்லாத வகையில் டிஜிட்டல் செயல்முறைகள் மற்றும் தடையற்ற கொள்முதல் மற்றும் உரிமை கோருதல் என்று அனுபவத்துடன் எளிய காப்பீட்டு தயாரிப்புகளை வழங்க நாங்கள் கடமை பட்டு இருப்பதாக தெரிவித்தார். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில வாடிக்கையாளர்களுக்கான முன்னணி காப்பீட்டு நிறுவனமாக இந்த ஆண்டு எங்கள் நிறுவனம் விளங்கும். இந்த காப்பீட்டு விழிப்புணர்வு வாரம் மூலம், காப்பீடு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், காப்பீடு குறித்து வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாக வைத்திருக்கிறது.ஐஆர்டிஏஐ அமைப்புடன் இணைந்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான அரசு அதிகாரிகளின் ஆதரவோடு காப்பீடு துறையின் இத்தகைய கூட்டு முயற்சிகள் உருவாக்க திட்டமிட்டு இருக்கிறது என்று கூறினார்.

# அனைத்துத்துறை திட்டப்பணிகள் தொடர்பாக கலெக்டர், கண்காணிப்பு அலுவலர் ஆய்வு



**விருதுநகர், டிச. 14-**
அனைத்துத்துறை திட்டப்பணிகள் தொடர்பாக மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சண்முகசுந்தரம் ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சண்முகசுந்தரம், அனைத்துத் துறை திட்டப்பணிகள் குறித்து தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், கடந்த கூட்டத்தில் திட்டப் பணிகள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது பல்வேறு துறை சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், செயல்பாடுகள் தொடர்பாகவும் அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் திட்டத்தில் அரசு நிர்ணயித்த இலக்கை அடைவதோடு, கூடுதலாக விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூடுதல் பயனாளிகளுக்கு விவசாயக் கடன் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பேரூராட்சி, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தனிநபர் கடன் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். தொடர்ந்து வேலை வாய்ப்பு முகாம், கடன் பெறுவதற்கான முகாம் நடத்தப்பட வேண்டும். மகளிர் திட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை சார்பிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி வழங்க வேண்டும். மின்சார வாரியம் மூலம் தற்போது தேவையினை கணக்கிட்டு, புதிய துணை மின்நிலையம் மற்றும் மின்சார உபகரணங்கள் தேவையினை ஆய்வு செய்து முன்கூட்டியே பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள கட்டுமான பணிகளுக்கு வருவாய்த்துறையினர் விரைந்து நிலம் கையகப்படுத்த வேண்டும். நிலம் வழங்கியவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அனைத்து பொதுமக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் குறித்த நேரத்தில் நேரடியாக சென்று சேர்வதற்கு அரசின் விதிமுறைக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்புடைய அரசு அலுவர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வழங்கினார். பின்னர், விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு சிகிச்சை பிரிவுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, சிகிச்சை பெற்று வரும் உள் நோயாளிகளிடம் சிகிச்சையின் தரம், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் அணுகுமுறைகள், அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்து கைத்தறித்துறை இயக்குநர் / மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சண்முக சுந்தரம், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன், ஆகியோர் ஆய்வு செய்தனர். தொடர்ந்து, விருதுநகர் முஸ்லீம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.90.50 இலட்சம் மதிப்பில், வகுப்பறைகள் மற்றும் சுகாதார வளாகம் கட்டப்பட்டு வருவதை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சண்முக சுந்தரம், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன், ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராஜேந்திரன், திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, சிவகாசி சார் ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன்,உதவி ஆட்சியர் ஹிமான்சு மங்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிர்தௌஸ் பாத்திமா அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் களஞ்சியம் செயலி குறித்து கலெக்டர் சிம்ரன்ஜீத் காலோன் அறிவுரை



**ராமநாதபுரம், டிச. 14-**
ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கருவூலத்துறை சார்பில், ஓய்வூதிய பரிந்துரையை களஞ்சியம் செயலியில் அனுப்ப அறிவுறுத்தல் தொடர்பான அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில், வரும் நாட்களில் ஓய்வூதியம் முன்மொழிவுகளை மாநில முதன்மை கணக்காயர், சென்னை அலுவலகத்திற்கு களஞ்சியம் 2.0 தளத்தின் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டியவற்றை டிசம்பர் 31-ம் தேதிக்குள் களஞ்சியம் செயலியில் அனுப்ப வேண்டும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வருமான வரி தொடர்பான கோப்புகளை சரி செய்து கருவூல அலுவலரிடம் அளிக்க வேண்டும். மேலும் விடுபட்ட அல்லது தவறுதலாக உள்ள மின்கட்டண இணைப்புகளை சரி செய்து பதிவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட கருவூல அலுவலர் வ.சண்முக சுந்தரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வீ.பிரபாகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) கல்யாண சுந்தரம், மற்றும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் இலவச மருத்துவ முகாம்



**வத்தலக்குண்டு, டிச. 14-**
சேவுகம்பட்டி பேரூராட்சியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

பேரூராட்சி தலைவர் தங்கராஜன் தலைமை வகித்தார். முகாமினை துவக்கி வைத்தார். செயல் அலுவலர் ரமேஷ் பாபு. துணை தலைவர் தெய்வ ராணி விஜயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விரு வீடு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள். கலந்து கொண்டு தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு காய்ச்சல் சளி மூக்கடைப்பு கை கால் மூட்டு வலி சர்க்கரை அளவு உள்ளிட்ட பிரச்சனை பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இளநிலை உதவியாளர் அம்மாமுத்து வரித்தண்டலர் முருகானந்தம் மற்றும் அலுவலக பணியாளர்கள் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்-34 அண்ணாநகரில் புதுப்பிக்கப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை மேயர் இந்திராணி பொன்வசந்த் நேற்று திறந்து வைத்தார்.



காரியாபட்டி அருகே சூரனூர் கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் நெல் பயிர்கள் தொடர் மழையினால் சேதமான காட்சி.

## திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வேளாண் விளைபொருட்கள் விற்று சாதனை

**திருமங்கலம், டிச. 14-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் விடத்தக்குளம் ரோட்டில் அமைந்துள்ள திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இது வரை 6 ஆயிரம் மெட்ரிக் டன்க்கு மேற்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்று சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று ஒரே நாளில் எஸ்.பி.நத்தம் கிராமத்தை சேர்ந்த மூன்று விவசாயிகளின் 8800 கிலோ நாட்டு கொத்தமல்லி மூலம் ரூபாய் 8,86,600-க்கு வர்த்தகம் நடைபெற்றது.சித்தாலை மற்றும் சுங்குராம்பட்டி கிராம விவசாயிகளின் 4712 கிலோ குதிரைவாலி மூலம் ரூபாய் 1,37,936-க்கு வர்த்தகம் நடைபெற்றது. செங்கப்படை கிராம விவசாயின் 1826 கிலோ தோலுடன் கூடிய வேப்ப முத்து மூலம் ரூபாய் 68,475-வர்த்தகம் நடைபெற்றது. நெடுங்குளத்தை சேர்ந்த விவசாயியின் மதிப்புகூட்டப்பட்ட சந்துக் கவுனி அரிசி 116 கிலோ மூலம் ரூபாய் 22,040-க்கு வர்த்தகம் நடைபெற்றது என பல்வேறு வர்த்தகங்கள் மூலமாக மொத்தம் ரூ.12,98,347 - க்கு வர்த்தகம் நடைபெற்றது.

அதன்படி திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் இதுவரை 6015 மெட்ரிக் டன் அளவுள்ள 116 வகையான வேளாண் விளைப் பொருட்களை 20.85 கோடிக்கு விற்றுத் தந்து சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேல் விபரங்களுக்கு கண்காணிப்பாளர் ஜி.வெங்கடேஷ் (9025152075), மேற்பார்வையாளர் சீனிகுருசாமி(9600802823), சந்தை பகுப்பாளர் நாகஅர்ஜுன் (8754379755) ஆகியோரை தொடர்பு கொண்டு பயன் பெற்றிடலாம்.

### மதுரையில் பெய்த கனமழையால்
## மீனாட்சியம்மன் கோவில் முன்பு குளம் போல் தேங்கிய மழை நீர்

**மதுரை, டிச. 14-**

மதுரை மீனாட்சியம்மன் கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் குளம் போல் தேங்கி நிற்கிறது.

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி டெல்டா மற்றும் தென்தமிழக மாவட்டங்களில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பல்வேறு இடங்களில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது.

அந்த வகையில் மதுரையில் நேற்று தொடங்கி தற்போது வரை தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மதுரை மாநகர் பகுதிகளான கோரிப்பாளையம், தல்லாகுளம், மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. கனமழை காரணமாக நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து மதுரை மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

கனமழையால் மதுரையில் உள்ள பிரசித்தி பெற்ற மீனாட்சியம்மன் கோவிலை சுற்றியுள்ள சித்திரை வீதிகள், கிழக்கு ஆவணி மூல வீதி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கி நிற்கிறது. இதில் சித்திரை வீதி பகுதியில் தேங்கி நிற்கும் தண்ணீரில் கழிவுநீரும் கலந்துள்ளது. கோவிலுக்கு முன்பு தேங்கி நிற்கும் மழைநீரை கடந்துதான் பக்தர்கள் கோவிலுக்கு உள்ளே சென்று சாமி தரிசனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, கோவிலுக்குள் நுழையும்தங்கள் கால்களை சுத்தம் செய்துவிட்டு உள்ளே செல்வதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்ய வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை விரைவாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மதுரையில் நேற்று பெய்த தொடர்மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடிய காட்சி.

### மேலூர் பகுதியில்
## பகுதி நேர ரேஷன் கடை திறக்ககோரி பெரியபுள்ளான் எம்.எல்.ஏ. கோரிக்கை

**மேலூர், டிச. 14-**



தமிழக சட்டப்பேரவையில் கூட்டத் தொடரில் கேள்வி நேரத்தில் மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம் மேலூர் தொகுதிக்கு உட்பட்ட கம்பூர் ஊராட்சி சின்ன கற்பூரம் பட்டியிலும், மணப்பச்சேரி ஊராட்சி காரியேந்தல் பட்டியிலும், மற்றும் நரசிங்கம்பட்டி ஊராட்சி பெருமாள்பட்டியிலும், கீழவளவு ஊராட்சி குளிச்செவல் பட்டியிலும், கிடாரிப்பட்டி ஊராட்சி தேர்குன்றம்பட்டியிலும், கொங்கம்பட்டி ஊராட்சி பன்னிவீரன்பட்டி ஆகிய கிராம பகுதிகளில் தமிழக அரசு நிபந்தனைகளை தளர்த்தி பகுதி நேர ரேசன் கடை அமைக்க வேண்டி சட்டமன்றத்தில் எம்.எல்.ஏ பெரியபுள்ளான் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனிடம் கேட்டுக்கொண்டார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## உலகின் முதன்முறையாக புரட்சியை ஏற்படுத்தும் விஸ்பர்

**சென்னை, டிச 14-**

இந்தியாவின் முன்னணி பெண் சுகாதார பிராண்டான விஸ்பர், அதன் சமீபத்திய தயாரிப்பு - *Whisper Ultra Upto No Gap No Leaks* மூலம் மாதவிடாய் காலப் பாதுகாப்பை மறுவரையறை செய்துள்ளது.உலகின் முதல் *Curvewear* டெக்னாலஜியைக் கொண்டுள்ள இது, ஒரு பெண்ணின் உடலின் வரையறைகளுடன் தடையின்றி பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, எந்த இடைவெளியும், கசிவும் இல்லாமல், நாள் முழுவதும் மென்மையான, வசதியான உணர்வை வழங்குகிறது. *Whisper Ultra* உங்களுடனே நகரும் இறுதிப் பாதுகாப்பை, மென்மையோடும் சொகுசோடும் வழங்குகிறது.

*Procter & Gamble India*, ஃபெமினைன் கேர் பிரிவின் துணைத்தலைவர் மற்றும் பிரிவுத் தலைவர் திரு.கிரிஷ் கல்யாணராமன் அவர்கள், "விஸ்பரில், புதுமை என்பது பெண்களின் உண்மையான தேவைகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாட சவால்களை எதிர்கொள்வதாகும். *Whisper Ultra Upto No Gap No Leaks* என்பது வெறும் பேடு அல்ல; ஒவ்வொரு மாதமும் பெண்கள் எதிர்கொள்ளும் உண்மையான மாதவிடாய் பிரச்சனைகளான - கசிவுகள், அசௌகரியம் மற்றும் பாதுகாப்பின் நிலையான கவலை போன்றவற்றுக்கு இது ஒரு தீர்வாகும்.

இது குறித்து அனன்யா பாண்டே அவர்கள் மேலும் கூறுகையில்,

"விஸ்பருடன் இணைந்து செயல்படுவது எனக்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது, ஏனெனில் இது ஒரு பிராண்ட் அசோசியேஷன் என்பதைவிட மேலானது- மாதவிடாய் தொடர்பான உரையாடல்களை இயக்க இது ஒரு சக்தி வாய்ந்த தளமாகும். சுறுசுறுப்பான படப்பிடிப்பு நாளிலோ அல்லது ஓய்வு நாளிலோ நான் ஓய்வெடுக்கும்போதோ எனக்கு மாதவிடாய் ஏற்பட்டால் சிறந்த மாதவிடாய் தீர்வு வேண்டும்.

## சென்னை நகர மக்களின் தோல் பராமரிப்பு கவலையை நீக்கும் அமினு

**சென்னை, டிச. 14-**

பேஜ் 3 சலூன் உடன் கைகோர்த்துள்ளதாக தோல் பராமரிப்பு பொருட்கள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக திகழும் அமினு அறிவித்துள்ளது. உயர் செயல்திறன், சுத்தமான மற்றும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட தோல் பராமரிப்பு பொருட்கள் தயாரிப்பில் முன்னோடி பிராண்டான அமினு, பேஜ் 3 சலூனுடன் இணைந்து இங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு தோல் பராமரிப்பு சிகிச்சைகளை வழங்க உள்ளது. இந்தியாவில் அழகு பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்தி வரும் அமினு, அழகிற்கு முக்கியத்துவம் அளிக்கும் நகரங்களில் ஒன்றான சென்னைக்கு அதிநவீன, அறிவியல் சார்ந்த தோல் பராமரிப்பு சிகிச்சைகளை கொண்டு வருவதன் மூலம் தங்கள் செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்தி உள்ளது.

நீங்கள் பேஜ் 3 சலூனில் உள்நுழையும்போது மிகச்சிறப்பான ஒன்றுக்கு தயாராகுங்கள். இங்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்கள் தோலின் தன்மை குறித்து அடையாளம் காண ஸ்கின் நவ் அசெஸ்மென்ட் பரிசோதனை செய்யப்பட்டு, அதைத் தொடர்ந்து 10 அல்லது 12 நிலையிலான துல்லியமான தோல் பராமரிப்பு சிகிச்சையும் அளிக்கப்படும். 40க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பெறப்பட்ட சுத்தமான, உயர் செயல்திறன் கொண்ட பொருட்கள் மூலம், ஒவ்வொரு சிகிச்சையும் உங்கள் தோல் பராமரிப்பு வழக்கத்தை புதிய நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமினு நிறுவனர் அமன் மொஹந்தா கூறுகையில், பேஜ் 3 சலூன் உடனான எங்கள் கூட்டாண்மை மூலம், சென்னை நகர மக்களுக்கு தோல் பராமரிப்பில் தனித்துவமான சிகிச்சையை வழங்க உள்ளோம். அமினுவின் புதுமையான சிகிச்சைகளை சென்னைக்குக் கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், எங்களின் அனைத்து தயாரிப்புகளும் அறிவியல் ரீதியாக அழகை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும் என்று தெரிவித்தார்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 /94**

## கோவையில் ஸ்டான்லி லெவல் நெக்ஸ்ட் புதிய ஃபிளாக்ஷிப் ஸ்டோரை ஸ்டான்லி லைஃப்ஸ்டைல்ஸ் தொடங்குகிறது

**கோவை, டிச. 14-**

18,000 சதுர அடிக்கு மேல் பரந்து விரிந்துள்ள இந்த நன்கு நியமிக்கப்பட்ட அனுபவ மையம், ஆடம்பர தளபாடங்கள், பெஸ்போக் கேபினெட்ரி மற்றும் நேர்த்தியான பாகங்கள் ஆகியவற்றை உன்னிப்பாகத் தேர்ந்தெடுத்து வழங்குவதன் மூலம், இப்பகுதியில் உள்ள சொகுசு வீடுகளில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.ஆடம்பர கைவினைத்திறனில் 25 ஆண்டுகளுக்கும் மேலான சிறந்து விளங்கும் ஸ்டான்லி, கலைத்திறன் மற்றும் செயல்பாட்டைக் கலக்கும் காலமற்ற கையால் வடிவமைக்கப்பட்ட தளபாடங்களை உருவாக்குவதற்கான அதன் வடிவமைப்பு கண்டுபிடிப்புகள் மற்றும் அர்ப்பணிப்பைத் தொடர்கிறது.402, அவிநாசி - கோயம்புத்தூர் ரோடு, அரசூர், தமிழ்நாடு 641407 என்ற முகவரியில் அமைந்துள்ள கோயம்புத்தூர் ஸ்டோர், தனது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வீடுகளை ஆடம்பரமான வீடுகளாக மாற்றும் ஸ்டான்லியின் நோக்கத்திற்கு ஒரு சான்றாகும்.

இது குறித்து ஸ்டான்லி லைஃப்ஸ்டைல்ஸின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் சுனில் சுரேஷ் கூறுகையில், காலத்தால் அழியாத ஆடம்பரத்தை உருவாக்குபவர்கள் என்ற வகையில், பாரம்பரியத்தையும் நவீன நேர்த்தியையும் அழகாகச் சமநிலைப்படுத்தும் நகரமான கோயம்புத்தூருக்கு ஸ்டான்லி லெவல் நெக்ஸ்ட் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.இந்த அறிமுகமானது, எங்கள் வாடிக்கையாளர்களின் சுத்திகரிக்கப்பட்ட ரசனைக்கு ஏற்றவாறு வடிவமைப்புகளை வடிவமைப்பதில் எங்களின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த அதிநவீன சேகரிப்பின் மூலம் ஆடம்பர வாழ்வில் புதிய வரையறைகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்று கூறினார்.

## நத்தத்தில் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம்



**நத்தம், டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் யூனியன் அலுவலகம் எதிரே உள்ள அம்மா திருமண மண்டப வளாகத்தில் நத்தம் வட்ட சட்டப் பணிகள் சார்பாக பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு மாவட்ட முதன்மை நீதிபதி முத்துசாரதா தலைமை தாங்கினார்.மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற நத்தம் நீதிபதி நல்லகண்ணன் முன்னிலை வகித்தார். இதில் பெண்களுக்கான உரிமைகள் பற்றியும், சட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசப்பட்டது.முகாமில் சார்பு நீதிபதி திரிவேணி, வக்கீல்கள் சங்க தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட 80-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## நத்தம் அருகே வீட்டிற்குள் புகுந்த பாம்பு



**நத்தம், டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக்நகரை சேர்ந்தவர் வெங்கிட்டம்மாள்(50). இவரது வீட்டில் நேற்று காலை சாரைப்பாம்பு ஒன்று ஊர்ந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த அவர் நத்தம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட வீரர்கள் வீட்டில் பதுங்கியிருந்த 4 அடி நீளமுள்ள சாரைப்பாம்பை கருவி மூலம் லாவகமாக பிடித்தனர்.பின்னர் அந்த பாம்பு நத்தம் வனத்துறையினரிடம் ஒப்படைக்கபட்டு வனப்பகுதிக்குள் விடப்பட்டது.

## பரமக்குடியில் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



**பரமக்குடி, டிச. 14-**

பரமக்குடியில் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று சுமார் 11 செ. மீ அளவு மழையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு ஏற்பட்டது.தொடர் மழை காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 11ஆம் தேதி முதல் பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு நாட்களாக ஓரிரு இடங்களில் கன மழை பெய்து வருகிறது. குறிப்பாக பரமக்குடியில் நேற்று சுமார் 11 செ. மீ மழை பதிவானது. இரண்டு நாட்களாக பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விடிய விடிய இரவு கனமழை பெய்தது. இதில் சத்தியமூர்த்தி நெசவாளர் காலனி, வெங்கடேஸ்வரா காலனி,ராம் நகர், சோமநாதபுரம், பாலன் நகர்,எம்ஜிஆர் நகர், செந்தமிழ் நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் வீடுகளை சுற்றி மழைநீர் தேங்கியது.இதனால் இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு அடைந்தது.பரமக்குடி, முதுகுளத்தூர் சாலையில் அமைந்துள்ள இரயில்வே சுரங்கப் பாதையில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமம் அடைந்தனர். விரைவில் சரி செய்ய பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றது.பரமக்குடி நகர் பகுதியில் தேங்கிய மழை நீரை நகராட்சி சார்பில் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


**காணவில்லை**

எனக்கு சொந்தமான இராமநாதபுரம் வட்டம், பிரப்பன்வலசை குரூப், இருமேனி கிராமம், பட்டா எண். 1559, சர்வே எண். 22/1, ஆவண எண். 403/2011 சொத்திற்கான அசல் கிரைய பத்திரம் கடந்த 03.12.2024 -ம் தேதி திருப்புல்லாணி பஸ் ஸ்டாப்பில் ஜெராக்ஸ் எடுத்த போது தவறி தொலைந்து போனது. அதை எடுத்து வைத்திருப்பவர்கள் கீழ்கண்ட எனது முகவரிக்கு தெரிவிக்கவும்.

முத்துமாரி
த/பெ. பெரியகருப்பன்.
1/10, குத்துக்கல் வலசை,
மேதலோடை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.
செல்: 9080197563


### அருப்புக்கோட்டையில் கனமழை:
## நகர் முழுவதும் மழை நீர் ஆக்கிரமிப்பு

**அருப்புக்கோட்டை டிச.14.**

அருப்புக்கோட்டையில் நேற்று அதிகாலை முதல் பெய்த கனமழை காரணமாக பெரியபுளியம்பட்டி மழை நீர் வரத்து கால்வாயில் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு மழை நீர் முழுவதும் விருது நகர் சாலையில் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மேலும் அப்பகுதி ஓடை வழியாக காட்டாற்று வெள்ளம் போல் மழை நீர் செல்கிறது. இதனால் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். ஓடைகள் தூர்வாரப்படாமல் உள்ளதால் இது போன்று அடைப்புகள் ஏற்படுகிறது. மேலும் அருப்புக்கோட்டை சுற்றியுள்ள கண்மாய்கள் தெப்பங்கள் ஏற்படும் பகுதிகள் முழுவதையும் மழை நீர் ஆக்கிரமித்து கொண்டது. எனவே மழை நீர் வரத்து கால்வாய் ஓடைகளை முழுமையாக தூர்வார வேண்டுமென சமூக ஆர்வலர்கள் விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**


**NAME CHANGE PUBLICATION**

It is informed that my client KAMESHWARI D/o. Kamatchi having old Passport No.M3389539 is residing at Old No.7G, New No.8A, Nellaiappapuram 6th Street, Thirupparankundram, Tirunagar, Madurai, Pin-625006, Tamil Nadu, India. In the Passport No.M3389539 the name of my client is mentioned as KAMATCHI BALAJI. Now my client is willing to change her name to KAMESHWARI KAMATCHI. In all the civil documents such as PAN Card,Aadhar Card etc., my client's name is mentioned as KAMESHWARI K. This publication is effected for changing the name of my client from KAMESHWARI BALAJI to KAMESHWARI KAMATCHI.

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம்**
**பரமக்குடி**
**ந.க.பி 6 /8506/2024**

பூமிகிருஷ்ணன் த/பெ.
சித்திரவேல் விளாத்திக்கூட்டம்
முதுகுளத்தூர் வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை சித்திரவேல் 16.05.2009 அன்று முதுகுளத்தூர் வட்டம், விளாத்திக் கூட்டம் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 26.12.2024 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

பூமிகிருஷ்ணன்
மனுதார்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம்**
**பரமக்குடி**
**ந.க.பி 6 /7750/2024**

இராமசாமி
த/பெ கருத்தபோத்திரெட்டியார்
1/125 நடுத்தெரு உச்சிநத்தம்
கடலாடி வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை கருத்த போத்தி ரெட்டியார் 06.06.1990 அன்று கடலாடி வட்டம், உச்சிநத்தம் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 18.12.2024 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

இராமசாமி
மனுதார்

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்**
**உத்தமபாளையம்.**
**ந.க.எண்: 4544 / 2024 /அ1**

கருப்பையா, த.பெ. சுருளி,
க.எண்: 6, வார்டு - 2,
மேற்குத்தெரு, சன்னாசிபுரம்,
போடிநாயக்கனூர் வட்டம்.
தேனி மாவட்டம்.
-மனுதாரர் -

-எதிர்-

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.
-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தகப்பனார் திரு. சுருளி என்பவர் கடந்த 31.05.2018-ம் தேதியன்று சன்னாசிபுரம் கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கருப்பையா
மனுதாரர்

**ந.க.எண்.7456/2024**
**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை**
**அறிவிப்பு**

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், 3/176, மேற்கு தெரு, ஆலம்பட்டி, ஆண்டிபட்டி என்ற முகவரியில் வசிக்கும் இந்துமதி என்பவரின் தாயார் மீனாகுமாரி க/பெ.பாலசுப்பிரமணியன் என்பவர் கடந்த 19.04.2023ந் தேதி சிவகங்கை வட்டம், மாயா மஹால் பின்புறம், சி.பி. காலனி என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்துமதி
மனுதார்

